1991 செப்டம்பர் 13]

மாண்புமிகு திருமதி இரா. இந்திர குமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது அது தேவையில்லை என்று இந்த அரசு கருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஆர். பி. பரமசிவம்.

திரு. ஆர். பி. பரமசிவம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்துணவுக் கூடங்களில் உணவு அருந்துகின்ற பிள்ளைகளுக்குத் தற்போது பெற்றோர்களின் வருட வருமானம் கேட்கின்றார்கள். அதை அரசு கேட்டுள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன். அதுமட்டுமல்லாமல், அங்கே வேலை செய்கின்ற ஆயாக்களுக்கு வயதுவரம்பு குறித்து மருத்துவர்களிடம் சான்று கேட்டிருக்கிறார்கள். அதுவும் அரசு கேட்டிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–10

மாண்புமிகு திருமதி இரா. இந்திர குமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்தப் பெற்றோரிடமும் அரசு எந்த வருமான வரம்பையும் கேட்கவில்லை என்பதை தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஆயாக்கள் மருத்துவச்சான்றிதழ் வாங்க வேண்டும் என்று சொல்வது, 55 வயது, 60 வயது ஆனவர்கள் கூட இன்றும் பள்ளியில் இருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்கள் ஒரு பொய்யான தகவலை அரசுக்குத் தரக்கூடாது என்ற அடிப்படையில்தான் அவர்களுடைய வயது வரம்பினை இன்றைக்கு மருத்துவச் சான்றிதழ் மூலம் பெற்றுக் கொண்டிருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. 11—9—1991 ஆம் நாளன்று அவையில் பயன்படுத்தப் பட்ட 'பேய்' என்ற சொல் குறித்து சில பத்திரிகையாளர்கள் கோரிய விளக்கத்திற்குப் பேரவைத் தலைவர் வழங்கிய தீர்ப்புரை

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவைக்கு ஒரு முக்கிய செய்தி. நேற்றைக்கு முன்தினம் அவையில் ஒரு பிரச்சினை பற்றி எழுப்பப்பட்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதில் கலந்து கொண்டு தன்னுடைய விளக்கத்தையும் சம்பந்தப்பட்டவர்களுக்கு வேண்டுகோளையும் எடுத்து வைத்தார்கள், அப்போது இந்த

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

24 11—9—1991 ஆம் நாளன்று அவையில் பயன்படுத்தப் பட்ட 'பொய்' என்ற சொல் குறித்து சில பத்திரிகை யாளர்கள் கோரிய விளக்கத்திற்குப் பேரவைத் தலைவர் வழங்கிய தீர்ப்புரை

[பேரவைத் தலைவர்] [1991 செப்டம்பர் 13

அவையில் நடக்காத ஒரு சம்பவத்தை,பேசாத ஒரு பேச்சை அவை யிலே பேசப்பட்டதாகவும் நடந்ததாகவும் சொல்லி வருவது குறித்து பொய் என்கிற வார்த்தையைப் பயன்படுத்தியிருந்தார்கள். அப்படி 'வெளியில் அவர்கள் பேசுவது பொய்' என்று முதலமைச்சர் அவர்கள் சொன்னது பற்றி அந்தப் பொய் என்கிற பதத்தை அவையில் பயன்படுத்தலாமா என்று சில பத்திரிகையாளர்கள் என்னிடத்தில் சொல்லி விளக்கங்கள் கேட்டார்கள். இது அவை சம்பந்தப்பட்ட விஷயம் என்கிற காரணத்தால் அதற்கு நான் விளக்கம் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். சில பத்திரிகை களில் கூட அவர்கள் 7 முறை அந்த வார்த்தையைப் பயன்படுத்தி னார்கள் என்பது நாம் எல்லோரும் கேட்டதுதான், ஏதோ தெரியாததைப்போல — 7 முறை அந்த வார்த்தையைப் பயன் படுத்தினார்கள் என்று போட்டிருக்கிறார்கள். ஆனால் அந்த வார்த்தையைப் பொறுத்தமட்டில் அவர் சொன்னது— அவையில் என்ன மரபு கடைப்பிடிக்கப்பட்டு வரப்படுகிறது என்றால் . . . .

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : தலைவர் அவர்களே, ஒரு முக்கியமான விஷயம் சொல்ல விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. எஸ். ஆர். பால சுப்ரமணியன்.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையில் சென்ற ஆண்டு நான் துணை நிதிநிலை அறிக்கையின் மீது பேசுகிறபோது அன்றைய காவல் துறை இயக்குநர் அதாவது டி.ஜி.பி. அவர்கள் புலிகள் அல்ல என்று டி.ஜி.பி. சொல்கிறார் என்று நான் சொன்னேன். உடனே முதலமைச்சர் எழுந்து அது சரியான தகவல் அல்ல என்று சொன் னார்கள். பத்திரிகைகளில் செய்தி வந்திருக்கிறது என்று சொல்லி குறிப்பாக அந்தப் பத்திரிகையின் பெயரையும் சொல்லி, தினமலர் பத்திரிகையில் செய்தி வந்திருக்கிறது என்று சொல்லி, நான்காவது பக்கத்தில் கொட்டை எழுத்திலே 'புலிகள் அல்ல என்கிறார் டி.ஜி.பி.' என்று வந்ததை எடுத்துக்காட்டி அந்த பத்திரிகையில் செய்தி வந்திருக்கிறது என்று சொன்னேன். உடனே முதலமைச்சர் எழுந்து சொன்னார். 'பொய்' அந்த பத்திரிகை வேண்டுமென்றே பொய்யாக எழுதுகிறது என்று சொன்னார். தவறு என்று அவர் சொன்னதால் நான் அதை விட்டுவிட்டு வாதங்களை மட்டும் சொன்னேன். வாதங்களில் என்ன சொன்னேன் என்றால் பி.பி.சி.யிலே வந்ததைச் சொன்னேன். பிறகு பொய் என்று சொன்னால் அப்போதே சொல்லி இருக்க வேண்டும். அல்லது ஒருநாள் கழித்துச் சொல்லியிருக்க வேண்டும். அல்லது இரண்டு நாள் கழித்துச் சொல்லி இருக்க வேண்டும், 30 நாட்கள் கழித்துச்

11—9—1991 ஆம் நாளன்று அவையில் பயன்படுத்தப் 25
பட்ட ''பொய்'' என்ற சொல் குறித்து சில பத்திரிகை
யாளர்கள் கோரிய விளக்கத்திற்குப் பேரவைத் தலைவர்
வழங்கிய தீர்ப்புரை

1991 செப்டம்பர் 13]   [திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்]

சொல்கிறார்கள் என்பதால் அதை ஏற்றுக்கொள்ள முடியாது என்பதை மட்டும் நான் சொல்லி விட்டுவிட்டேன். ஆனால் என்ன நடந்தது? அவையின் முன்னாலே வந்து அவைத் தலைவர் அவர்களிடம் சொல்லி அதை அகற்றாமல், முதலமைச்சர் அவர்களும் அந்த சொல்லை அகற்றி விட்டு உண்மைக்குப் புறம்பாக என்று போடவேண்டும் என்று கேட்டுக்கொள்ளாமல், தாங்களாகவே அவைக் குறிப்பிலே 'பொய்' என்பதற்கு பதிலாக 'உண்மைக்குப் புறம்பான' என்று எழுதி, அதேபோல் பத்திரிகையில் போட வேண்டுமென்றும் பத்திரிகையாளர்களை நிர்ப்பந்தப்படுத்தியிருக்கிறார்கள் — நான் பொறுப்பேற்றுக்கொண்டுதான் சொல்கிறேன். நானாகச் சொல்லவில்லை — ஆக சில நேரங்களில் சொல்கிற ஒரு சொல் பேசுகிற வேகத்தில் சொல்கிற சொல்லுக்கு அவ்வளவு பெரிய அர்த்தங்கள் இருப்பதாக நான் நினைக்கவில்லை. இங்கே சொல்வது எந்தவிதமான விகர்ப்பமும் இல்லாமல் தவறான நோக்கம் இல்லாமல் இங்கே பேசப்படாத ஒன்றை வெளியிலே போய் சொன்னது உண்மைக்குப் புறம்பானது என்று சொல்வதற்குப் பதிலாக பொய் என்று சொல்லி விட்டாலே அது பெரிய தவறு என்று நான் நிச்சயமாக நம்பவில்லை. அது தவறு என்று சொன்னால் அன்றைய தினம் இதே பத்திரிகைகள் — அன்றைய முதலமைச்சர் செய்தார் அல்லவா—அப்போதே தைரியமாக எழுதி இருக்க வேண்டும். சபையில் பொய் என்ற சொல்லைத்தான் சொன்னார். உண்மைக்குப் புறம்பான என்ற சொல்லைச் சபையிலே பயன்படுத்தவில்லை. சபைக்கு முன்னாலே வந்து மீண்டும் அவர், தான் பொய் என்று சொன்ன வார்த்தைக்குப் பதிலாக 'பேரவைத் தலைவர் அவர்களே, குறிப்பிலே உண்மைக்குப் புறம்பான என்ற சொல்லைச் சேர்த்துக்கொள்ள வேண்டும்' என்று அன்றைய தினம் முதல்வர் அவர்கள் சொல்லவில்லை. எனவே அன்றைய தினம் அது தவறாக அவர்களுக்குத் தெரியவில்லை. எனவே இதிலே பெரிய தவறு நடந்துவிட்டதாக நான் நினைக்கவில்லை. அவையினுடைய கவனத்திற்கு தங்கள் வாயிலாக இதைக் கொண்டு வரவேண்டும் என்ற நோக்கத்தோடுதான் சொல்கிறேன்.

முற்பகல் 10-15

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் சொன்னதோடு, மேற்கொண்டு சில செய்திகளும் இருக்கின்றன. அதற்காகத்தான் நான் இந்த நேரத்தைப் பயன்படுத்திக் கொள்ள விரும்புகிறேன். அன்றைக்கு முதலமைச்சர் அவர்கள் இந்த அவையில் ஒரு உறுப்பினர் பேசியது பொய் என்று சொல்லியிருந்தால்தான் இந்த வாதமே தவிர அவையிலே நடந்த ஒரு பிரச்சினையைப் பற்றிக் கருத்து தெரிவிக்கிறபோது அந்த வார்த்தையைப் பயன்படுத்தக்கூடாது என்பதை மற்ற எல்லா உறுப்பினர்களையும் விட மிகத் தெளிவாக அறிந்தவர் நம்முடைய

26 11—9—1991 ஆம் நாளன்று அவையில் பயன்படுத்தப் பட்ட ''பொய்'' என்ற சொல் குறித்து சில பத்திரிகை யாளர்கள் கோரிய விளக்கத்திற்குப் பேரவைத் தலைவர் வழங்கிய தீர்ப்புரை

[பேரவைத் தலைவர்] [1991 செப்டம்பர் 13

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் என்பது அத்தனை பேருக்கும் தெரியும். (மேசையைத் தட்டும் ஒலி.) அவர்கள் நாடாளுமன்ற மேலவையிலே பணியாற்றியிருக் கிறார்கள். இங்கே சட்டமன்றத்திலே இரண்டொரு நாட்கள் தான் அவர் வந்து பணியாற்றவே முடிந்தது சென்றமுறை. அந்தக்கால கட்டங்களில், அங்கே நாடாளுமன்ற விதிமுறைகளாக இருக்கட்டும். இங்கே சட்டமன்ற விதிகளாக இருக்கட்டும். துளிகூட மாறாமல் பணியாற்றியவர் நம்முடைய முதலமைச்சர் என்று பெயர் பெற்று இருக்கின்றவர் ஆவார். எனவே அது தெரியாமல் அவர்களும் சொல்லி இருக்க மாட்டார்கள். அவையிலேயும் இங்கே எல்லோரும் நாம் கேட்டுக் கொண்டு இருந்தோம். அதைப் பற்றி நாம் பேசாமல் இருந்த தற்குக்காரணம் அவர் சொன்ன அந்த சூழ்நிலை என்பதால்தான் அந்த வார்த்தையைப் பயன்படுத்துவது எந்த வகையிலேயும் மரபுக்கு மாறான செயல் அல்ல என்றுதான் எல்லோரும் பேசாமல் இருந்தோம். ஆனால் சிலர் அந்தப் பிரச்சினையை எழுப்பி இருக்கின்ற காரணத்தினாலே, அது அவர் தெரிவித்தது வெளியில், இங்கே நடக்காத ஒன்றை, வெளியிலே போய் ஒருவர் பேசிக்கொண்டிருப்பது, 'பொய்' என்று சொன்னது அவைக்குறிப்பிலே இருப்பது எந்த வகையிலேயும் தவறானது அல்ல.

மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், முன்னாள் முதலமைச்சா அவர்கள் தெரிவித்து, அதற்குப் பிறகு அவைக் குறிப்பிலே இருந்து நீக்கிய ஒரு நிகழ்ச்சியைத்தான் சொல் கிறீர்கள் (குறுக்கீடு) இல்லை, இல்லை. இங்கே சொல்லாமல் தானாகவே அது நீக்கப்பட்டது. ''உண்மைக்கு மாறானது'' என்று தெரிவித்ததாகச் சொல்கிறீர்கள். இன்னொரு இடத்தில், அந்தச் சொல்லை இப்போது நான் தெரிவிப்பதைப் போல வெளியிலே நடைபெற்ற ஒரு சம்பவத்தைக் குறிப்பிடுகிறபோது அதைப் பயன்படுத்தலாம்.

இங்கே ஓர் உறுப்பினரைப் பற்றி சொல்லும்போதுதான் '' உண்மைக்குப் புறம்பான செய்தி '' என்று சொல்ல வேண்டு மென்று அவரே சொல்லியிருக்கிறார்.

27—4—1989 அன்று அவையினுடைய உறுப்பினர் மறைந்த திரு. எஸ். எஸ். தென்னரசு அவர்கள் பேசுகிறபோது அந்த வார்த்தையைப் பயன்படுத்தியிருந்திருக்கிறார். அப்போதைய உறுப்பினர் திரு. உகம்சந்த் அவர்கள் பேசும்போது அதற்கு மறுப்புத் தெரிவித்திருக்கிறார். அதற்குப் பதில் அளித்த அன்றைய முதலமைச்சர் அவர்கள் பேசுகிறார்.

11—9—1991 ஆம் நாளன்று அவையில் பயன்படுத்தப் பட்ட ''பொய்'' என்ற சொல் குறித்து சில பத்திரிகை யாளர்கள் கோரிய விளக்கத்திற்குப் பேரவைத் தலைவர் வழங்கிய தீர்ப்புரை

1991 செப்டம்பர் 13] [பேரவைத் தலைவர்]

'' தலைவர் அவர்களே, நண்பர் உகம்சந்த் அவர்கள் பேசும் போது கூட ஒரு மறுப்பு எழுப்பப்பட்டது. ஆனால் ஒரு உறுப்பினர் பேசுவது '' பொய் '', என்று இன்னொரு உறுப் பினர் குற்றஞ்சாட்டும்போது தான் பொய் என்ற வார்த்தை, 'அன்பார்லியமெண்டரி ', அப்போதுதான் ' அன்பார்லிய மெண்டரி ' என்று சொல்லப்பட்டு விலக்கப்பட வேண்டும். 'பொய்யாக', 'பொய் வழக்கு ', ' பொய்க்கூற்று' என்று சொல் வதிலே எப்படி தவறு இல்லையோ, அது போல ஒரு உறுப்பினர் இங்கே பேசுகிற பேச்சைப் பற்றி குறிப்பிடாமல் வெளியிலே நடந்த சம்பவத்தைப்பற்றி குறிப்பிடுகிறபோது, ஒருவர் சொன்னது பொய் என்று சொல்லும்போதுதான் அது அன்பார்லியமெண்டரியாக ஆகாது. பொய் என்ற வார்த்தை யைப் பயன்படுத்தக் கூடாது என்றால், நீங்களே—அவைத் தலைவர் அவர்களைப் பார்த்து சொல்கிறார்—'பொய்மையும், வாய்மையும் ' என்ற குறளைக்கூட இங்கே பயன்படுத்த முடியாமல் போய்விடும்'' என்று அன்றைய முதலமைச்சர் அவர்களே இங்கே கருத்துத் தெரிவித்திருக்கிறார்கள்.

அந்த வகையிலேதான் இங்கே நடந்த சம்பவத்தைப் பற்றி முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டு அந்த வார்த்தையைப் பயன்படுத்தாமல், இங்கே நடைபெறாத சம்பவத்தை ஒருவர் வெளியிலே போய் சொல்வது ' பொய் ' என்று சொல்லி இருப்பது எந்த வகையிலேயும் அவையின் மரபுக்கு மாறான செயல் அல்ல என்று தீர்ப்பு அளிக்கிறேன்.

3. தகவல் கோரல்.

(அ) சென்னை நகரில் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாகச் சிலர் துண்டுப் பிரசுரங்கள் வெளியிட்டுள்ளது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சிங்காரம் அவர்கள் சென்னை நகரத்திலே நடந்த ஒரு சம்பவத்தை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வர என்னுடைய அனுமதியைக் கேட்டிருக்கிறார்கள். அவருக்கு அனுமதியை வழங்குகிறேன்.

*திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2 நாட்களுக்கு முன்னதாக மாண்புமிகு எங்களுடைய உறுப்பினர் திரு. குமரி அனந்தன் அவர்கள் எழுப்பிய பிரச் சினைக்கு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் பதில் அளிக்கின்ற போது விடுதலைப் புலிகளுக்கு ஆதரவு அளிக்கின்ற யாராக இருந்தாலும் தகுந்த நடவடிக்கை எடுப்பேன், சட்டம் ஒழுங்கைக் காப்பாற்றுவோம் என்று அறிவித்தார்கள்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS